# இலக்கியத்தில் தூய அன்னை மரியா

## (Holy Mother Mary in Literature)



பதிப்பாசிரியர்

அருள்தந்தை முனைவர் சி. மணிவளன் சே.ச.

கிறித்தவ ஆய்வு மையம்

Centre for Christian Research (CCR)

தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 002

## நூல் குறிப்பு

நூலின் பெயர் : **இலக்கியத்தில் தூய அன்னை மரியா**

பதிப்பாசிரியர் : அருள்தந்தை முனைவர் சி. **மணி வளன், சே.ச.**

நுவல் பொருள் : கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள்

முதற்பதிப்பு : செப்டம்பர் 2018

மொழி : தமிழ்

உரிமை : கிறித்தவ ஆய்வு மையம்

நூல் அளவு : டெம்மி

பக்கங்கள் : (xiv+278)

அச்சிட்டோர் : தி பிரிண்டிங் கவுஸ்,
காஜாமலை, திருச்சி-23.

நூல் வெளியீடு : கிறித்தவ ஆய்வு மையம்
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 002.

ISBN : 978-93-87360-14-3

விலை : 200/-

## BIBLIOGRAPHICAL DATA

Name of the Book : **Holy Mother Mary in Literature**

Editor : Rev. Dr. S. Mani Valan SJ

Print : September 2018

Language : Tamil

Copy Right : Centre for Christian Research (CCR)

Pages : (xiv+278)

Press : The Printing House
Kajamalai, Tiruchirappalli-23.

Book Size : Dimmy

Published by : Centre for Christian Research (CCR)
St. Joseph's College (Autonomous)
Tiruchirappalli-620 002.

ISBN : 978-93-87360-14-3

Price : 200/-

36. "அற்புத அன்னை பதிகம்" நூலில் தூய அன்னை மரியா 223
தொ.சூசைமிக்கேல்

37. இலக்கியத்தில் தூய அன்னை மரியா 227
அருட்சகோ. சூ.அருள் ஆனந்த ரோஸி

38. அன்னை மரியாள் : அன்னை தெரசாவின் இதயம் 232
முனைவர் ஆ.ஜோசப் சார்லி ஆதாஸ்

39. அன்னை மரியாவின் புகழ்பாடும் திருவழிபாட்டுப் பாடல்கள் 237
முனைவர் செ.கென்னடி

40. பாத்திமா அன்னை காட்சி கொடுத்த நூற்றாண்டு விழா (2017-ஆம் ஆண்டு) 241
அருள்தந்தை முனைவர் சி.மணி வளன் சே.ச.

41. **Unveiling the Holy Virgin: An Ardent Attempt to Differentiate Mary, the Mother of God from Maryām, the mother of *æ Īsā*** 243
Fr. Swaminathan, S.J.

42. **Muslims respect Our Lady,Mary & fear demonic possession** 254

43. கிறித்துவ இலக்கியங்களில் மரியாளின் மாண்பு 263
முனைவர் ஆ. ஷர்மி

44. இயேசு காவியத்தில் தூய அன்னை மரியா 268
தா.ஆரோக்கிய தாஸ்

45. 'மொழி'களுக்கு மொழியினள் 275
முனைவர் இரா.ஏஞ்சல்

46. **Glory of virgin Mary in Thomas Merton's Marian Poems** 281
Dr.S.Papu Benjamin Elango

✦✦✦

# 45. 'மொழி'களுக்கு மொழியினள்

முனைவர் இரா.ஏஞ்சல்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி,
மதுரை – 18.

மனிதனின் உள்ளக் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படும் ஆயுதமே மொழி. உலகளவில் பேசப்படும் மொழிகள் பலவாக இருப்பினும் மௌனமொழி ஞானிகளின் மொழியாக இருப்பது உண்மையே! குடும்பமாக இருப்பினும் தனிநபர் சார்ந்த சிக்கலாக இருப்பினும் அங்கே சிக்கலைச் சந்திக்கும் நபர்களின் இணைப்பு மொழியாக, சமாதான மொழியாக இருப்பது மௌனமொழி எனலாம்.

இலக்கிய உலகில் இன்று பேசப்படும் மொழிகள் பலவற்றிற்கும் ஆதித்தாய், அன்னை மரியாளே! கிறித்தவக் காப்பியங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது திருவிவிலியமே. திருவிவிலியத்தில் அன்னைமரியாள் பற்றி இடம்பெறும் செய்திகள், இன்றைய இலக்கிய மொழிகள் பலவற்றிற்கு வித்தாய் அமையுமாற்றை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**பெண் மொழியினள்**

பெண்ணாணவள் தனக்கான உரிமையைக் குறித்துப் பேசும்போது அது பெண்மொழியாகிறது. அன்னையாம் கன்னி மரியாள் யூதகுல வழித்தோன்றல். கன்னி மரியாளும் அவளது வாழ்க்கைத் துணைவர் யோசேப்பும் கடவுளுக்குள் நிறைவான தன்மை படைத்தவராய் வாழ்ந்தனர். இருவருக்கும் மணஒப்பந்தம் ஆகும் சூழலில் கபிரியேல் என்னும் தூதர் கன்னிமரியாவுக்குத் தோன்றினார். மரியாவை வாழ்த்தி, **"இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்: அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்"** (லூக்கா நற்செய்தி 1:31) என்கிறார். அதற்கு மரியா வானதூதரிடம் **'இது எப்படி நிகழும்?'** (லூக்கா நற்செய்தி 1:34) என எதிர்க்கேள்வி கேட்கிறாள்.

இவ்விடத்து இதே லூக்கா நற்செய்தியில் செக்காரியா பற்றிக் குறிப்பிடும் போது,

**"செக்காரியாவும் அவரது மனைவி எலிசபெத்தும் கடவுள் பார்வையில் நேர்மையானவர்களாய் விளங்கினார்கள். ஆண்டவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்பக் குற்றமற்றவர்களாய் நடந்து வந்தார்கள். அவர்களுக்கும் பிள்ளைகள் இல்லை: ஏனெனில் எலிசபெத் கருவுற இயலாதவராய் இருந்தார். மேலும் அவர்கள் வயது முதிர்ந்தவர்களாயும்**